தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**

# ஆண்டிறுதிப் பரீட்சை 2016

**ஆண்டு: 6** **திகதி: 26 - 11 - 2016**

**ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா**

**மாணவர் பெயர்:**

| வினா இலக்கம் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 25 | |
| 2 | 20 | |
| 3 | 15 | |
| 4 | 05 | |
| 5 | 15 | |
| 6 | 20 | |
| | | |

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்:

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

### 1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு பூரணமான விடை தருக:-

<u>பென்குவின் பறவைகள்</u>

பறவைப் பூங்காவில் பென்குவின் பறவைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவை தள்ளாடி நடப்பதைப் பார்க்கும்போது நமக்கு வேடிக்கையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் பென்குவின் பறவைகளை நீங்கள் அதிகம் காணலாம். பெரும்பாலும் அவற்றின் முதுகுப்புறம் கறுப்பாகவும், அடிப்பாகம் வெள்ளையாகவும் காணப்படும். அவை மீன்களையும், மற்றக் கடல்வாழ் பிராணிகளையும் விரும்பித் தின்னும். கீவி, நெருப்புக்கோழி முதலிய பறவைகளைப் போலவே பென்குவின்களாலும் பறக்க முடியாது. அவற்றின் உடல் பெரிதாகவும், இறக்கைகள் சிறிதாகவும் இருப்பதனால் அவற்றால் பறக்க முடிவதில்லை. எனினும் அவை தம் இறக்கைகளைத் துடுப்புப் போல பயன்படுத்தி தண்ணீரில் மிக வேகமாக நீந்தும் ஆற்றல் கொண்டன. அவை தரையில் நடக்கும்போது கால்களை ஊன்றி நிமிர்ந்து செல்கின்றன. அவ்வாறு நடப்பதற்கு அவற்றின் கால்கள் உடலின் பிற்பகுதியில் அமைந்து இருப்பதே காரணம்.

பென்குவின் பறவைகளில் பலவகையுண்டு. அவற்றுள் அரச பென்குவின்தான் உருவத்தில் பெரியது. அது ஒரு சமயத்தில் ஒரு முட்டைதான் இடும். மற்ற வகை பென்குவின்கள் உருவத்தில் சிறியவை. ஆவை நீல நிறமுடையவை. அரச பென்குவினைப்போல அல்லாமல் அவை ஒன்றுக்கு மேற்பட்ட முட்டைகள் இடும். பென்குவின்கள் சுமார் 35 ஆண்டுகள் உயிர் வாழக்கூடியவை. அவற்றைப் பழக்குவது எளிது. அவை வளர்ப்பவர்கள் மீது அன்பாக நடந்து கொள்ளும்.

1. பென்குவின் பறவைகளை அதிகம் காணக்கூடிய மூன்று நாடுகளின் பெயர் தருக?

…………………………………………………………………………………………………………

2. உரைப்பகுதியில் தரப்பட்ட பறக்கமுடியாத பறவைகள் மூன்றின் பெயர் தருக?

…………………………………………………………………………………………………………

3. பென்குவின்கள் எவ்வாறு நீரில் வேகமாக நீந்துகின்றன?

…………………………………………………………………………………………………………

4. பென்குவின் பறவைகள் வாழக்கூடிய அதிகூடிய காலம் எத்தனை வருடங்கள்?

…………………………………………………………………………………………………………

5. பென்குவின் பறவைகள் நிலத்தில் எவ்வாறு நிமிர்ந்து நடக்கின்றன?

…………………………………………………………………………………………………………

(5x3=15 புள்ளிகள்)

6. பொருள் தருக (ஒத்த சொல்)

1. தின்னும் -
2. வேகமாக -
3. ஆண்டுகள் -

4. நிமிர்ந்து -

5. மகிழ்ச்சியாக –

(5x2=10 புள்ளிகள்)

**2. பின் வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிக் கோட்டில் கண்ணன் என்ற பெயருடன் பொருத்தமான வேற்றுமை உருபை வைத்து எழுதுங்கள். (20 புள்ளிகள்)**

1. ………………………….. சிட்னியில் உள்ள தொழிற்சாலையில் பணிபுரிகிறான்.

2. ……………………………………. இன்னும் பல தொழிலாளர்களும் அங்கே பணிபுரிகின்றனர்.

3. எந்த வேலையையும் ………………………………………….. எளிதாகச் செய்ய முடியும்.

4. வேலை நேரத்தில் கதைபேசி பொழுது போக்குவது …………………………… அறவே பிடிக்காது.

5. அதனால் அங்குள்ள அனைவருக்கும் ………………………. நன்றாகப் பிடிக்கும்.

6……………………….. கடமை உணர்வு முதலாளியை மிகவும் கவர்ந்தது.

7. அவர் ……………………… இந்தப் பண்பைக் கற்றுக் கொள்ளுமாறு மற்றைய தொழிலாளர்களிடம் கூறினார்.

8. வெகுவிரைவில் ……………………… பதவி உயர்வு கிடைத்தது.

9. ………………………. முன்னேற்றத்தைக் கண்டு எல்லோரும் பாராட்டினார்கள்.

10. அவர் தந்தையர்……………………… மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் தனது முதுமைக் காலத்தைக் கழித்தார்.

**3.** **தனது தந்தையாரின் சுகவீனத்தால் கவலையடைந்து படிப்பில் கவனம் செலுத்தாமலும், பாடசாலைக்கு ஒழுங்காக வராமலும் இருக்கும் உங்கள் உற்ற நண்பனுக்கு கல்வியின் அவசியத்தைக் கூறி அறிவுரைக் கடிதம் ஒன்று எழுதுக:**

( 15 புள்ளிகள்)

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

**4. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோட்டில் எழுதுங்கள். (5 புள்ளிகள்)**

1. பாம்பைக் கண்ட சிறுவன் …………………. (தலை / தளை) தெறிக்க ஓடினான்.

2. செண்பகப்பூ வாடினாலும் …………………….. (மனம் / மணம்) தரும்.

3. ………………………… (குரை / குறை) இல்லாத மனிதர்கள் உலகில் இல்லை.

4. உடல் ………………..( பலம் / பழம்) பெற சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

5. பாலில் சீனியை போட்டு ……………………… (கறைத்து / கரைத்து) குடித்தால் இனிமையாக இருக்கும்.

**5. பின்வரும் தொடக்க உரையை வாசித்து, உங்கள் கற்பனையில் மிகுதிப் பகுதியை எழுதி, ஒரு கதையாக நிறைவு செய்யுங்கள்.**

உங்கள் கற்பனை 50 சொற்களுக்குக் குறையாது அமைய வேண்டும். (15 புள்ளிகள்)

எமது வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லப் போவதாக எமது வகுப்பு ஆசிரியர் அறிவித்த நாளில் இருந்து எனது நண்பர்கள் எல்லோரும் மிகவும் ஆவலுடன் அந்த நாளை எதிர்பார்த்திருந்தோம். கடல் வாழ் உயிரினங்கள் வாழும் காட்சிச்சாலைக்கு செல்லப்போகிறோம். அந்த நாளும் வந்தது. காலை ஏழுமணிக்கு வகுப்பு மாணவர்களும், எமது வகுப்பு ஆசிரியரும், இரண்டு உதவி ஆசிரியர்களும் பயணத்திற்கு ஆயத்தமாக பாடசாலை மைதானத்தில் கூடினோம். பெற்றோர் எம்மை வழியனுப்ப வந்திருந்தார்கள். நாங்கள் இருவராக வரிசையில் நிற்க பேருந்து வண்டியும் வந்தது.

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

**6.** **பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுங்கள்.** (20 புள்ளிகள்)

1. தந்தையர் தினம்
2. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்
3. அவுஸ்திரேலியாவில் இயற்கை அழிவுகள்
4. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..